## நீதிபதி இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச்சூடு வழக்கு:

# யாழ். மேல் மன்றில் தோன்றி சாட்சியம் அளித்தார் நீதிபதி



மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையில் இன்று நீதிபதி இளஞ்செழியன் நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியம் அளித்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அவரது மெய்ப்பாது காவலாரான பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்தமை மற்றும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்த சம்பவம் தொடர்பான வழக்கு இன்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் சாட்சியமளிப்பதற்காக வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்கு வருகைதந்தார். 2

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 11 புதன்கிழமை 24.04.2024 கதிர் 239

# இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் வழக்கு மே31 வரை ஒத்தி வைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிருவாகத் தெரிவு தொடர்பான வழக்கு இன்று திருகோணமலை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு தகவல் வழங்கிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, வழக்கு மே மாதம் 31 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், இவ்வழக்கிற்கு 7 எதிராளிகள் பெயரிடப்பட்டுள்ள நிலையில் 2ம், 4ம் எதிராளிகளான தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன், செயலாளராக தெரிவாகிய ச.குகதாசன் ஆகியோருக்குச் சார்பாக ஆஜரானேன்.

சுமார் மூன்று மணி நேரங்கள் இவ்வழக்கு விவாதிக்கப்பட்டு சமர்ப்பணம் செய்யப்பட்டது.

கடந்த பெப்ரவரி 15ம் திகதி வழகுகல் தாக்கல் செய்யப்பட்டு 29ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கு பொதுநலன் கருதி முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும். 2

# குறித்த நான்கு நாட்களில் முடியாது! மே மாதத்தில் தயார் என்கிறார் சஜித்!

## கடிதங்களுக்குப் பதிலாக விவாதங்களுக்கு வாருங்கள் எனவும் ஜேவிபி க்கு தெரிவிப்பு



விவாதத்திற்கு வருமாறு தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டுள்ள நான்கு தினங்களிலும் ஸ்மார்ட் வகுப்பறைகள் வழங்கும் நிகழ்வுகளில் கலந்து கொள்ள ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளதால், அந்த நாட்களில் அல்லாமல் வேறொரு தினத்தில் விவாதத்திற்கு வர தாம் தயார் எனவும் எதிர்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். அதன்படி,மே மாதத்தில் இந்த இரண்டு விவாதங்களுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

விவாதத்திலிருந்து ஓடி ஒளியாமல் இந்த இரண்டு சவால்களையும் ஏற்றுக் கொள்ளுமாறும் கோழைகளாக ஓடிப்போக வேண்டாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பாடசாலைகளுக்கு 'ஸ்மார்ட் வகுப்பறைகள்' வழங்கும் நிகழ்வொன்றின் போதே 2

# ஸ்ரீலங்கன் விமான சேவையை கொள்வனவு செய்வதற்கு பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேராவின் ஹேலிஸ் நிறுவனமும் முனைப்பு



உள்ளிட்ட ஸ்ரீலங்கன் விமான சேவையை கொள்வனவு செய்வதற்கு ஆர்வமாக உள்ள 6 தரப்பினரில் கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்க பெரேராவிற்கு சொந்தமான ஹேலிஸ் நிறுவனமும் ஒன்று என தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிறுவனத்தின் 51 வீத பங்குகளை தம்மிக்க பெரேரா கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸை கொள்வனவு செய்வதற்கான ஏலத்தில் இலங்கையைச் சேர்ந்த 3 முதலீட்டாளர்கள் உட்பட 6 முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக அரச நிறுவன மறுசீரமைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. இதில் உலகின் முன்னணி குறைந்த கட்டண விமான சேவையான எயார் ஏஷியா மற்றும் இலங்கையில் இயங்கும் ஃபிட்ஸ் ஏவியேஷன் ஆகியனவும் அடங்கும்.

ஸ்ரீலங்கன் விமான சேவையை கொள்வனவு செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ள 6 முதலீட்டாளர்களின் விபரங்கள் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழ் உள்ள அரச நிறுவன மறுசீரமைப்பு 2

# சஜித் – அனுர விவாதத்திற்கு 4 நாட்கள் குறித்து அனுப்பியது தேசிய மக்கள் சக்தி



தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கிடையிலான விவாதத்திற்கு தேசிய மக்கள் சக்தி நான்கு நாட்களை வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மே மாதம் 7, 9, 13, 14 ஆகிய 4 தினங்களை வழங்கியுள்ள தேசிய மக்கள் சக்தி, குறித்த தினங்களில் ஒரு தினத்தை தேர்ந்தெடுத்து உடனடியாக விவாதத்திற்கான திகதியை வழங்குமாறு ஐக்கிய மக்கள் சக்திக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

அதன்படி, திகதி உறுதி செய்யப்பட்ட பின்னர் விவாதம் நடைபெறும் இடம் மற்றும் தொலைக்காட்சி 2

# ஆசிரிய வெற்றிட நேர்முக தேர்வு ஏப்ரல் 29 - மே 9 வரை நடை பெறும்

2024 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் திகதி தேசிய பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கென நடைபெற்ற போட்டி பரீட்சைகளின் பெறுபேறுகள் படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேர்முகத் தேர்வு ஏப்ரல் 29 முதல் மே 9 வரை இசுருபாய கல்வி அமைச்சில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நேர்முகத் தேர்விற்கு தகுதி பெற்றுள்ள ஆசிரியர்களின் பெயர் பட்டியல் மற்றும் அழைப்பு கடிதங்கள் கல்வி அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ரெசி-106)

# 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது

தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியாத நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான கால அவகாசம் ஜுன் 30 ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது.

குறித்த நபர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கும் நடவடிக்கை மார்ச் 31 ஆம் திகதி வரை மட்டுமே நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதேச செயலாளர்களின் கோரிக்கைகளை கருத்திற் கொண்டு கால அவகாசத்தை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிறப்புச்சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இதுவரை அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்காக இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ரெசி-105)

## குறித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் "பொருளாதார வல்லுனர்களுக்கு இடையேயான விவாதத்தில் கலந்து கொள்ள அவர்கள் பின்னடிப்பது, தமது பொருளாதார வல்லுநர்களுக்கு போதிய திறமை இல்லாததாலா என கேட்க விரும்புகின்றேன். எனவே, கடிதங்கள் அனுப்புவதற்கு பதிலாக, அவர்கள் மே மாதத்தில் இரண்டு விவாதங்களுக்கும் வந்து தமது செயல் வீரத்தை காட்டுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அப்படியல்லாமல் வெறுமனே வாய் சவடால்களை விடுவதை தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"சிங்களம் மட்டும் தமிழ் மட்டும் என கூறும் தலைவர்கள் தமது வாக்கு வங்கியை மட்டுமே நிரப்பிக் கொள்கின்றனர், பாடசாலை மற்றும் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும் பிள்ளைகளோ தொழில் வாய்ப்பின்றி காத்துக் கிடக்கின்றனர். வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளது, இந்த முறையை மாற்ற வேண்டும். தொழில்முனைவோரை உருவாக்கும் அறிவு பாடசாலை கல்வியிலும் புகட்டப்பட வேண்டும். அதன்மூலம் கல்வியின் போது தொழில்முனைவோரை உருவாக்கும் அறிவை வழங்கி ஒரு மில்லியன் தொழில்முனைவோரை உருவாக்க முடியும்" எனவும் எதிர்கட்சித் தலைவர் இந்நிகழ்வின் போது மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரெசி-104)

## இலங்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சி யாப்பை மீறியதாக இங்கு எதுவும் சொல்லப்படவில்லை. குறிப்பாக சில விதிகள் மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் வழக்குத் தொடர்ந்தால் அதனை வெற்றி கொள்ளலாம். ஆனால், காலம் செல்லும். வழக்கை காலம் சென்ற நிலையில் வெற்றி கொண்டால் தோல்வியாகவே கருதப்படும்.

வழக்காளி கோரும் நிவாரணத்தை வழங்கத் தயாராக இருக்கிறோம். எங்களுடைய நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இதனை வழக்காளி தனது சட்டத்தரணி ஊடாகத் தெரிவிக்க வேண்டும். வழக்கை வாபஸ் பெற வேண்டும், என எனது வாதத்தை நீதிமன்றில் தெரிவித்தேன், என்றார்.

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனும், காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரும் சாட்சியமளித்தனர்.

குறித்த வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் விசேட அரச சட்டவாதி நாகரத்தினம் நிசாந்தும், எதிராளிகள் சார்பில் சட்டத்தரணி பிரதீபன் சர்மினியும் ஆஜராகினர்.

மேற்படி வழக்கு விசாரணை தொடர்ச்சியாக மூன்று தினங்களுக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. (அ)

## ஸ்ரீலங்கன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவினால் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை கொள்வனவு செய்ய விருப்பம் தெரிவித்துள்ள தரப்பினர் விபரங்கள் வருமாறு - எயார் ஏஷியா நிறுவனம், தர்ஷான் எலைட் இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங், ஃபிட்ஸ் ஏவியேஷன் நிறுவனம், ஷேரிஷா டெக்னொலொஜிஸ் நிறுவனம் மற்றும் ஹெய்லிஸ் நிறுவனம் ஆகியனவாகும். (ரெசி-107)

## சஜித்-அனுர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அலைவரிசை ஆகியவற்றை முடிவு செய்ய முடியும் தேசிய மக்கள் சக்தி முன்மொழிந்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தம்மை வேட்பாளராக முன்னிறுத்தவுள்ள தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் தலைவர்கள் இருவரும் விவாதமொன்றிற்கு வர வேண்டும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான விவாதம் நாளுக்கு நாள் தாமதமாகி வந்தமை குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன என தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டுள்ளது.

ஏதேனும் காரணத்தின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தி திகதியொன்றை வழங்க சம்மதிக்கவில்லை என்றால் அது குறித்து தமக்கு அறியத் தருமாறும் தேசிய மக்கள் சக்தி மேலும் தெரிவித்துள்ளது. (ரெசி-103)

# சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரி செயற்படுவதற்கு நிரந்தரத் தடை உத்தரவு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வகிக்க நிரந்தரத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட பிரதான நீதிமன்றத்தால் இன்று குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மொன்டேகு சரத் சந்திர தாக்கல் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் கொழும்பு மாவட்ட பிரதான நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (அ)

# நாடாளுமன்றுக்குப் புதிய உறுப்பினர்!

பொதுஜன பெரமுன கட்சியின் என்.ஜி. வீரசேன கமகே இன்று நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.நந்தசேனவின் மறைவால் வெற்றிடமாகிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று (24) காலை நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் வீரசேன சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம்: இன்றைய கூட்டத்திலும் ஏமாற்றமே கிடைத்தது!

## முதலாளிமார் சம்மேளனம் பங்கேற்கவில்லை

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் இன்று நடைபெற்ற சம்பள நிர்ணய சபைக் கூட்டமும் எவ்வித முடிவும் எட்டப்படாமல் முடிவடைந்துள்ளது. இன்றைய கூட்டத்திலும் முதலாளிமார் சம்மேளனம் பங்கேற்கவில்லை என்று சம்பள நிர்ணய சபைக் கூட்டத்தில் பங்கேற்றிருந்த தொழிற்சங்கங்கள் தெரிவித்தன. சம்பள நிர்ணய சபை தொழில் ஆணையாளர் தலைமையில் கொழும்பில் இன்று கூடியது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தாலும், முதலாளிமார் சம்மேளனம் கூட்டத்தைப் புறக்கணித்தது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார். கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற சம்பள நிர்ணய சபைக் கூட்டத்திலும் முதலாளிமார் சம்மேளனம பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1,700 ஷரூபா வழங்கப்பட வேண்டும் என யோசனை முன்மொழியப்பட்டுள்ளது. (அ)

# அரச வருமானத்தில் ஏற்றம்!

2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் எதிர்பார்க்கப்பட்ட அரச வருமானத்தை விட அதிக வருமானத்தை ஈட்ட முடிந்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வருடத்தின் முதல் மூன்று மாதங்களில், நாட்டின் பிரதான வருமானம் ஈட்டக்கூடிய இலங்கை சுங்கம் மற்றும் கலால் வரி திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக 834 பில்லியன் ஷரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருமான அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்டதை விட 6 வீத வருமான அதிகரிப்பாகும் என அவர் தெரிவித்துள்ளார். 2024ம் ஆண்டிற்குள் 4,106 பில்லியன் ஷரூபா அரச வருமானம் எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

# சுதந்திரக் கட்சி தலைவர்களுக்கு எதிராக 3 தடை உத்தரவுகள்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை நியமிப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும், கட்சியின் பொதுச் செயலாளராக துஷ்மந்த மித்ரபால செயல்படுவதைத் தடுத்து மற்றுமொரு தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்காலிக தலைமைச் செயலர் எடுத்த முடிவுகளை அமல்படுத்த தடை விதித்து நீதிமன்றம் மற்றொரு தடை உத்தரவையும் பிறப்பித்துள்ளது.

மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் சமர்ப்பித்த முறைப்பாட்டுக்கு அமைய கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான இந்த தடை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த தடை உத்தரவு வரும் மே 8 ஆம் திகதி வரை அமலில் இருக்கும் என்று உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# திருகோணமலையில் சித்திரைக் கலை விழா





(ஹஸ்பர் ஏ.எச் )

திருகோணமலை மாவட்ட தமிழ் அமுதம் கலைவட்டத்தின் சித்திரைக் கலை விழா ஞாயிற்றுக்கிழமை (21) திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ் அமுதம் கலைவட்டத்தின் தலைவரும் அதிபருமான திருமதி சுஜந்தினி யுவராஜா தலைமையில் இடம்பெற்ற சித்திரைக்கலை விழாவுக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி த.வருணி மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஊடகவியலாளரும் எழுத்தாளருமான திருமதி ஜெ.நித்தியானந்தன், ஓய்வுநிலை அதிபர்களான க.ஜெயநாதன், ப.மதிபாலசிங்கம், ந.நவரெத்தினராஜா, கெ.சித்திரவேலாயுதம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், கிராம சேவையாளர், கலாசார உத்தியோகத்தர்கள், எழுத்தாளர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

கவிஞர் அம்.கௌரிதாசனின் தலைமையில் கவியரங்கும், கவிஞர் க.யோகானந்தனின் தலைமையில் விவாத அரங்கும், சிலம்பம், அகரம் மக்கள் கலைக்கூடம் மாணவர்களின் புல்லாங்குழல் இசையும், பேச்சு, கவிதை, திருக்குறள், பாடல்கள், பிரகதீஸ்வரா நடன கலாலயா மற்றும் சிவபாத நடனாலயா மாணவர்களின் நடனங்கள் உட்பட பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

# உலகளாவிய ராமகிருஷ்ண மிஷன் அமைப்பினுடைய பெருந்தலைவராக சுவாமி கௌதமானந்தா ஜீ நியமனம்



(வி.ரி.சகாதேவராஜா)

உலகளாவிய ராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடம் ஆகியவற்றின் 17 வது பெருந்தலைவராக அதன் துணைத் தலைவராகவிருந்த அதிவணக்கத்துக்குரிய ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தா ஜீ நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று 24 ஏப்ரல் 2024 அன்று தமிழகத்தின் பேலூர் மடத்தில் நடைபெற்ற மடத்தின் அறங்காவலர்கள் குழு மற்றும் மிஷனின் நிர்வாகக் குழு கூட்டத்தில் இந்நிய மனம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதன்போது ராமகிருஷ்ண மடம் மற்றும் ராமகிருஷ்ண மிஷன் ஆகியவற்றின் தலைவராக சுவாமி கௌதமானந்தாஜி மகராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உலகளாவிய ராமகிருஷ்ணமடம் மற்றும் மிஷனின் துணைத்தலைவரும், சென்னை ராமகிருஷ்ண மடத்தின் தலைவருமாக இருந்த அதிவண ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தா ஜி மஹாராஜ், 5 நாள் விஜயத்தை மேற்கொண்டு கடந்த வருடம் இலங்கை வருகை தந்திருந்தமை தெரிந்ததே.

அகில உலக ராமகிருஷ்ண மிஷனின் 16 வது பெருந்தலைவர் அதி வணக்கத்திற்குரிய சங்ககுரு ஸ்ரீமத் சுவாமி ஸ்மரணானந்தஜி மகராஜ் கடந்த மாதம் 25 ஆம் திகதியன்று தனது 94 வது வயதில் இயற்கையெய்தியதை அடுத்து இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



# மிதி வெடி

போன கிழமை வவுனியா மோட்டார் போக்கு வரத்துத் திணைக்கள விசியம் வெளியில வந்ததில அதிகாரிகள் கொஞ்சம் கடுப்பாகிப் போட்டினமாம்.... ஜனாதிபதி செயலகத்தில இருந்து வடக்குக்கு வந்தவரும் வலு அக்கறையா விசியத்தைக் கையாண்டிருக்கிறார். ஒண்டும் செய்யேலாமல் “மெடிக்கல் போர்ட்” முடிச்சு “லைசென்ஸ்” குடுக்குறதுக்கு அலுவல் பாத்திருக்கினமாம்..

அதிலும் விழுந்தாலும் மீசையில மண் ஒட்டேல்ல எண்டுமாப் போல, “மோட்டார் சைக்கிள்” மட்டும் தான் குடுக்கலாம்... “கார், ஓட்டோ” எண்டா நாங்கள் சொல்லுறமாதிரி “மொடிஃபை” பண்ண வேணும் எண்டு சொல்லியிருக்கினமாம்....!

அந்தப் பிள்ளை பொதுப் போக்குவரத்து ஒழுங்கில்லாத தூர இடத்தில இருந்து வேலைக்கு வந்து போறதுக்கு “மோட்டார் சைக்கிள்” ஓடத்தானே “லைசென்ஸ்” கேட்டது? கேட்ட உடனயே சட்ட திட்டப்படி குடுத்திருந்தா ஏன் அடுத்த கட்டத்துக்கு விசியம் போகுது? அவரவர் வேலையை அவரவர் சரியாச் செய்தால், “தாம் - தூம்” எண்டு குதிக்கத் தேவையில்லையே?

இப்பிடித் தான் இங்க இருக்கிற கன அதிகாரிமார். தங்கட வரையறைக்குட்பட்ட விசியத்தில தேவையில்லாமல் “பவரை”க் காட்ட வெளிக்கிட்டு கடைசியில மூக்குடைபட்டுப் போய் நிக்கிறது!

இதுக்குள்ள, நூதனத் திருட்டு எண்டு ஒரு விசியம் கேள்விப்பட்டிருப்பியள்... நூதனத்தை வலு நூதனமாய்ச் செய்யிற ஆக்களும் இருக்கினம் பாருங்கோ....! ஏதோ ஒரு படத்தில நடிகர் செந்தில் “போஸ்ட் மன்” ஆக இருந்து வாற “மணி ஓடர்” எல்லாத்தையும் சுருட்டுவார். இங்க ஒரு படி தாண்டி வாற வெளிநாட்டுப் பாசலுகளில பெரும்பாலானவை அடிக்கிற தடம் தெரியாமல், காணாமல் போகுதாம்.... திரும்பக் கேப்பாரில்லலாமல் அவையள் தங்கட வீடுகளுக்குக் கொண்டு போகினமாம்...!

போன கிழமை பெரியாஸ்பத்திரியில வேலை செய்யுற வைத்தியர் ஒருவர் “அலி எக்ஸ்பிரஸ்”ல - தான் “ஓடர்” பண்ணின பொருள் ஒண்டுமே கைக்கு வரக் காணம் எண்டு கொஞ்சம் மினக்கெட்டு விசாரிச்சுப் பாத்ததிலதான் விசியம் வெளியில வந்திருக்கு....

“ஒன்லைன் சொப்பிங்” அந்தாளுக்கு ஒரு பெழுதுபோக்கு... தான் என்ன ஓடர் பண்ணினன் எண்டதையே மறந்து போயிடுவார். அங்கினேக்க சின்னன், பொன்னனுகள் தபால் காரர் நேரடியாக் கொண்டு வந்து குடுக்கிற சாமானுகள் வந்து கொண்டிருக்க, பெரிசா... பார்சலில வாற ஒண்டும் வாறதாயில்லை.... இவருக்கும் என்னென்ன வந்தது, என்ன சாமான் வரக் கிடக்கு எண்டது ஞாகபமில்லை....

மனுசன் தன்ர மனிசீன்ர பிறந்த நாளுக்குப் பரிசு குடுக்க வேணும் எண்டு கொஞ்சம் பெறுமதியா ஒரு சாமானை ஓடர்பண்ணி இருக்குது... அதுவும் பிறந்த நாளுக்கு கன நாளைக்கு முன்னமே ஓடர் போட்டுட்டு வழக்கத்துக்கு மாறா ஒவ்வொரு நாளும் “கொம்ப்யூட்டர்” ல “ட்ரக்” பண்ணிக் கொண்டிருந்திருக்கிறார்.

“ஓடர் சிப்ற்”

“ஓடர் ஒன் த வே”

“ஓடர் ரீச்ட் டெஸ்ரினேஷன்” இப்பிடியே வந்து....

“ஓடர் இஸ் வித் லோகல் டிலிவரி பார்ட்னர்” - எண்டு வந்த பின்னும் கிட்டத்தட்ட ரெண்டு கிழமைக்கு மேலா பொருள் கைக்குக் கிடைக்கவுமில்லை. பொருளை வந்து வாங்குங்கோ எண்டு “பி.ஓ.டி” கிடைக்கவுமில்லை....

மனுசன் கொஞ்சம் “அலேர்ட்” ஆகி “கொம்பனி” ஐக் கேட்டிருக்குது... “கொம்பனிக்” காரங்களும் விலாவாரியா “உங்கள் பொருள் உங்களிடம் சேர்க்கப்பட்டு விட்டது” எண்டு சொல்லி ஏதும் தேவையெண்டா “எங்களுடைய விநியோகப் பங்காளியுடன் தொடர்பு கொள்ளுங்கள்” எண்டு விலாசத்தையும் தொலைபேசி இலக்கத்தையும் குடுத்திருக்கினம்.

இங்க தொலைபேசியில அடிச்சுக் கேட்டா.... “டிலிவெரி” செய்யுற ஆளில இருந்து “சீபிஎம்” வரை அதே எகத்தாளம்... பொறுக்க முடியாத மனிசன் நேரிலயே போயிருக்குது... அங்க போனா அவையள் “டிலிவரி” செய்திட்டினமாம்... இவற்றை பேரில ஆரோ ஒராள் கையெழுத்து வைச்சிருக்குது.... அதுவும் நேரில வந்து தான் “பார்சல்” எடுக்கப்பட்டிருக்குது.

அங்க விசாரிச்சுப் பாத்ததில உப்பிடி எத்தினையோ தில்லுமுல்லுகள் நடக்குதாம்... அங்க இருக்கிற அதிகாரிகள் கூடக் கண்டு கொள்வதில்லையாம்... ஒரு வேளை அவைக்கும் பங்கு இருக்குமோ என்னவோ.....?

எதுக்கும் வெளிநாட்டில “ஓடர்” பண்ணுறவை கொஞ்சம் யோசிச்சுப்

பொருட்களை வாங்குங்கோ... அஞ்சு பத்துக்கு ஆசைப்பட்டு கடைசியில ஒண்டுமில்லாமல் நிக்காதேங்கோ....!

பாவம் டாக்குத்தர்.... மனிசியின்ர பிறந்த நாளுக்குப் பரிசு குடுக்க வெளிக்கிட்டு நல்லாப் பாடம் படிச்சிருக்கிறார். “கொம்பனி” இப்ப அவருக்குக் காசைத் திருப்பித் தாறம் எண்டிருக்கினமாம்... ஆனால், பிறந்த நாள் இனி அடுத்த வருசம் தானே வரும்....!

டாக்குத்தரின்ர காசில “போஸ்ட் ஒஃபிஸ்” காரர் பிறந்த நாள் கொண்டாடியிருப்பினம் போல....

“ஊரான் வீட்டு நெய்யே ! என் பொண்டாட்டி கையே !”

-நரமுனி-

# கஞ்சா சட்டப்பூர்வமாதல் வேண்டும் என சில எம்.பி.க்கள் கூறுகின்றனர் ஆனால், அது பற்றி ஆராய்ச்சி செய்த என்னை ஏன் கைது செய்கின்றனர்?

## இது என்ன நியாயம் என கேள்வி எழுப்புகின்றார் பேராசியர் வசந்த சேன



கஞ்சா சட்டப்பூர்வமாக்கப்பட வேண்டும் என சில மக்கள் பிரதிநிதிகள் 22ம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றிக் கொண்டிருக்கும் அதேவேளையில், 'கஞ்சா' தொடர்பில் ஆராய்ச்சி செய்துவரும் பிஎச்டி பட்டம் பெற்ற ஒருவருக்கு கஞ்சா பற்றிய தகவல்களை ஏன் வழங்க முடியாது என அதிகாரிகளிடம் பேராசிரியர் வசந்த சேன வெலியங்க கேட்டுள்ளார்.

'கஞ்சா' பாவனையை ஊக்குவிக்க முயற்சித்ததாக லுனுகம்வெஹர பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்ட போதே பேராசிரியர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நான் கடந்த 5 வருடங்களாக சேகரித்த கஞ்சா செடியின் பல்வேறு பகுதிகளிலிருந்து தயாரிக்கப்பட்ட ஆடைகள், கைவினைப்பொருட்கள், இனிப்பு வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மருந்து வகைகள் மற்றும் இதர உணவு வகைகள் ஆகியனவற்றை இன்றும் கூட எவரும் பார்வையிட முடியும்" எனவும் பேராசிரியர் வசந்த சேன குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் "ஜனாதிபதி அலுவலகத்துக்குச் சென்று எனது தயாரிப்புகள் குறித்து நிபுணர் குழு முன்னிலையில் காண்பித்தேன். பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் காட்டியிருந்தேன். நான் திருடவோ, குற்றங்கள் எதுவுமோ செய்யவில்லை. அப்படியானால், கஞ்சா சட்டப்பூர்வமாக்கப்பட வேண்டும் என குரல் எழுப்பும் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களும் கூட குற்றவாளிகளாகவே கருதப்பட வேண்டும் வேண்டும். ஆனால், அவர்களுக்கு அவ்வாறு எந்தவொரு பிரச்சினையும் ஏற்படவில்லை.

'கஞ்சா' மீதான தடையை நீக்க வேண்டும் எனவும், அதன் மூலம் நாடு பொருளாதார ரீதியில் பலனடையலாம் எனவும் கூறிய முதல் நபர் நான் அல்ல, அவ்வாறு கூறியவர்களின் நீண்டதொரு பெயர் பட்டியலையே என்னால் முன்வைக்க முடியும். சட்டங்களில் திருத்தங்கள் இல்லாத நிலையில் ஆராய்ச்சியாளர்கள் கூட இன்று பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, உச்சநீதிமன்றம் எனக்கு நீதி வழங்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது" என றார்.

(ரெசி-108)



## ஈரான், இலங்கை ஜனாதிபதிகள் தலைமையில் உமா ஓயா திட்டம் திறந்து வைக்கப்பட்டது!

ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையில் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் இன்று திறந்து வைக்கப்பட்டது.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்குப் பின்னர் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் இத்திட்டம் ஒன்றாகும். உமா ஓயா திட்டத்தை திறந்து வைப்பதற்காக ஈரான் ஜனாதிபதி இன்று இலங்கையை வந்தடைந்திருந்தார். அவரது வருகையை முன்னிட்டு விசேட பாதுகாப்பு, போக்குவரத்துத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

## வடக்கு ரயில்வேயின் கட்டுமான பணிகளை பார்வையிட சென்றிருந்த ரயில்வே பொது முகாமையாளர் திடீர் மரணம்

*இந்திய கடன் திட்டத்தின் கீழ் அனுராதபுரத்திலிருந்து மஹாவ வரை வடக்கு ரயில்வேயின் கட்டுமானப் பணிகள் குறித்து மேற்பார்வை செய்ய சென்றிருந்த போது, ரயில்வே சேவை பொது முகாமையாளர் எச். எம். கே. டபிள்யூ. பண்டார நேற்று (23) காலை மரணமடைந்தார்.*

*திடீர் சுகவீனம் காரணமாக பண்டார அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். அவரது மரணத்திற்கு மாரடைப்பே காரணமாக இருக்கலாம் என கூறப்படுகின்றது. இறக்கும் போது அவருக்கு வயது 57.*

*மாத்தளை விஞ்ஞானக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் பேராதனை மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று பொறியாளராக தனது வாழ்க்கையை ஆரம்பித்தவராவார். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், ரயில்வே துறை வரலாற்றில் 25 வருட சேவைக்காலத்தை கொண்டிருந்தார்.*

*இந்திய கடன் திட்டத்தின் கீழ் அனுராதபுரம் முதல் மஹவ வரையிலான வடக்கு ரயில்வே சேவையின் கட்டுமான வேலைகள் தற்போது தம்புத்தேகம ரயில் நிலையம் வரை நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*(ரெசி–110)*

## தேசிய மக்கள் சக்தியின் மே தின பேரணிகளை நான்கு மாவட்டங்களில் நடத்துவதற்கு ஏற்பாடு



உலக தொழிலாளர் தினமான எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியன்று, தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் கொழும்பு, அனுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் மே தின பேரணிகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கமைய, அனுராதபுரத்தில் மே அணிவகுப்பு முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அனுராதபுரம் சேர் வலிசிங்ஹ ஹரிச்சந்திர பூங்காவிற்கு அருகில் ஆரம்பமாகவுள்ளது. இதற்கென, அநுராதபுரம், திருகோணமலை, புத்தளம், குருணாகல், மாத்தளை ஆகிய மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் கலந்துகொள்ளவுள்ளதோடு, அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு அனுராதபுரம் பொது விளையாட்டரங்கில் மேதினப் பேரணியை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ரெசி-101)

## பாலுறவு கொள்ளாமல் கர்ப்பமுற்ற 13 வயது சிறுமி தொடர்பில் டிஎன்ஏ சோதனை நடத்தப்படவுள்ளது

*பாலுறவு கொள்ளாமல் கர்ப்பமுற்ற 13 வயது சிறுமி தொடர்பில் மேலும் உண்மைகளை அறிவதற்காக சிறுமியை டிஎன்ஏ ஆய்விற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*இவ்வாறான சம்பவம் பதிவாகியிருப்பது இதுவே முதல் தடவையாக இருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ள பொலிஸார் மருத்துவப் பரிசோதனைகளின் மூலம் இது தொடர்பான முடிவுகள் எட்டப்படாவிட்டால், பொலிஸாரிடம் சிறுமி அளித்துள்ள வாக்குமூலங்களின் அடிப்படையில் விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க உத்தேசித்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.*

*இந்தச் சம்பவம் தொடர்பில் ஹெட்டிபொல பொலிஸார் இந்தச் சிறுமியிடம் தொடர்ச்சியாக வாக்கு மூலங்களைப் பதிவுசெய்துள்ள போதிலும், தான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாலுறவு கொள்ளவில்லை என சிறுமி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவர் குற்றமற்றவர் என்பதை அவரது குடும்பத்தினரும் உறுதி செய்துள்ளனர். மருத்துவ ஆய்வுகளில் கூட சிறுமியில் தவறு காண முடியவில்லை என்றே தெரியவந்துள்ளது.*

*(ரெசி–109)*

# சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் சர்வ மதப் பண்டிகை நிகழ்வுகள்

(சர்ஜூன் லாபீர்)

தமிழ், சிங்களப் புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகையையொட்டி சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் சர்வமத நல்லிணக்க விசேட விருந்துபசார நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் நடைபெற்றது.

சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் மேற்படி பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த விருந்துபசார நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர்.

மேற்படி நிகழ்வில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயரத்தன, உதவி பிரதேச செயலாளர் யூ.எல் அஸ்லம், சம்மாந்துறை பொலிஸ் நிலைய குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி யு.எல் ஏ.எம் நௌபர், மல்வத்தை கமநல சேவை பொறுப்பதிகாரி, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமில், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளார் எம்.பி.எம் /ஹுசைன், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.முஹம்மட், மேலதிக மாவட்டப் பதிவாளர் ஏ.கே.ரினோஸா, கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.






# குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு காரைதீவிலும் அரிசி விநியோகம்

(நூருல் ஹுதா உமர் )

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஆதரவு வழங்கி அந்த மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கும் விதமாக குறைந்த வருமானம் பெறும் சுமார் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு 10 கிலோ கிராம் நாட்டு அரிசியை இரண்டு (2) மாத காலத்திற்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வேலைத்திட்டம் தேசிய ரீதியாக அண்மையில் (21) ஜனாதிபதி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக காரைதீவில் நடைபெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம். முசாரப் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன், உதவி பிரதேச செயலாளர் செ.பாத்தீபன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் இராஜகுலேந்திரன், சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் எம்.எம்.அச்சுமுகமட் உட்பட பலரும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு அரிசிப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

# பொத்துவில் பிரதேச மட்ட கால்பந்தாட்ட சம்பியனானது அல் கலாம் வித்தியாலயம்!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொத்துவில் பிரதேசப் பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதுக்குற்பட்ட கோட்ட மட்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பொத்துவில் அல் கலாம் வித்தியாலயம் சம்பியனானது.

இந்த வெற்றியையடுத்து, அக்கரைப்பற்று வலய மட்டப் போட்டிக்கு பொத்துவில் பிரதேசத்திலிருந்து அல் கலாம் வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நான்கு குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கல்




(ஹஸ்பர் ஏ.எச்)

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருவாய் தரும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கோடு திருகோணமலையில் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கமானது நான்கு குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் எந்திரம் மற்றும் தூவல் நீர்ப் பாசனக் கருவிகளை நேற்று (23) வழங்கியது.

குறித்த உபகரணங்களை நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ச.குகதாசன் வழங்கி வைத்தார்.

மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாறான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.



# இலங்கையில் இருந்து ராமகிருஷ்ண மிஷனில் இணைந்த முதல் துறவி சுவாமி விபுலானந்தர்!

## துறவற நூற்றாண்டு விழாவில் ராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அக்ஷராத்மாநந்தா



(வி.ரி. சகாதேவராஜா)

"எமது இலங்கைத் திருநாட்டில் இருந்து உலகளாவிய ராமகிருஷ்ண மிஷனில் இணைந்த முதலாவது துறவி சுவாமி விபுலாநந்த அடிகளார் ஆவார். இலங்கைக்கு ராமகிருஷ்ண மிஷன் வருவதற்கு வித்திட்டவரும் அவரே".

இவ்வாறு காரைதீவில் இடம் பெற்ற முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண நிகழ்வில் ஆசியுரையாற்றிய இலங்கைக்கான ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் குறிப்பிட்டார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண வைபவம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் நேற்று (23) செவ்வாய்க்கிழமை காரைதீவு விபுலானந்த மணிமண்டபத்தில் நடைபெற்றது. அங்கு திரு முன் னிலை அதி தியாக கலந்து கொண்ட அவர் மேலும் உரை யாற்றுகையில்,

"சென்னையிலிருந்து அப்பொழுது இங்கு வந்த சுவாமி சர்வானந்தரின் சொற்பொழிவில் ஈர்க்கப்பட்ட சுவாமி விபுலானந்தர், வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் சேவை வழியில் செல்ல ராமகிருஷ்ண மிஷனில் இணைந்தார்.

நாட்டுக்கும் மக்களுக்கும் முழு நேர தொண்டு ஆற்றுவதானால் அதற்கு துறவறம் பெரும் உதவியாக இருக்கும் என்று எண்ணி அவர் துறவறம் பூண்டார்.

இன்று துறவறம் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருக்கின்றது. ராமகிருஷ்ண மிஷினில் தொண்டாற்றுவதற்கு துறவியாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அவர்கள் தன்னார்வ தொண்டராக இருந்தாலே மக்கள் சேவையாற்றலாம்" என்றார்.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம பேசுகையில்.

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய சுவாமிகள் 55 வருடங்கள் வாழ்ந்தாலும் 400 வருடங்கள் வாழ்ந்த ஒரு வரலாற்றை படைத்திருக்கின்றார். பௌத்தத்தில் இருக்கின்ற ஒருசிலரைப்போன்று தமிழில் பல்துறை விற்பன்னராக சுவாமிகள் விளங்கினார்.

அமரத்துவமான செயல்களை செய்தவர்கள் அமரராவதில்லை. அதுபோன்று சுவாமிகளின் பல்பரிமாண சேவையால் அவர்கள் இபபோதும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிக்கின்றார். எமது நாட்டைப் பிரிப்பதற்காக அன்று யுத்தம் நடைபெற்றது. இன்று உலக நாடுகளிலும் ரஷ்யா, உக்ரேன், ஈரான், இஸ்ரேல் போன்ற நாடுகளிலும் பிரிப்பதற்காக யுத்தம் நடக்கிறது. புத்த பகவான் கூறுகிறார், இயன்ற அளவு விட்டுக் கொடுங்கள் என்று. அதன் மூலம் தான் சிறப்பாக வாழலாம். சுவாமி விபுலானந்த அடிகள் ஒரு தீர்க்கதரிசி. அவர் இனமதபேதம் பார்க்காமல் அருஞ் சேவையாற்றிய பெரும் மகான். அவரது வழியில் நாமும் செல்ல வேண்டும்", என்றார்.

# முச்சக்கரவண்டிகளுக்கு கட்டண மீற்றர் ஜூன் 30ஆம் திகதி வரை கால அவகாசம்

மேல்மாகாணத்தில் முச்சக்கரவண்டிகளை ஒழுங்குபடுத்துவதற்கு ஜூன் 30ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு மானிய விலையில் கட்டண மீற்றரை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என அதன் தலைவர் ரஹ்மான் தெரிவித்தார்.

"பயணிகள் போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் கட்டண மீற்றர் இருக்க வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். பயணிகள் போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு கட்டண மீற்றர் இன்றியமையாத ஒன்று.

சாரதிகளுக்கு மலிவு விலையில் கட்டண மீற்றரை வழங்குவதற்கு அல்லது மீற்றர்களை இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு அரசாங்கத்திடம் கோருகிறோம்.

மேலும், மேல் மாகாணத்தில் முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்துவதற்கான பதிவு ஜூன் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஜூன் 30க்கு முன் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். அதன் பின்னர், பதிவு செய்யப்படாத முச்சக்கர வண்டிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸாருடன் இணைந்து பயணியர் போக்குவரத்து அதிகார சபை நடவடிக்கை எடுக்கும்'' எனவும் அவர் தெரிவித்தார்.






# புத்தளம் காதி நீதிபதி இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவால் கைது!

**மே 6 வரை விளக்கமறியல்**

(கற்பிட்டி எம் எச்.எம் சியாஜ்)

புத்தளம் மாவட்ட காதி நீதிபதியாக செயற்பட்டுவந்த சிலாபத்தைச் சேர்ந்த எம். ஆர்.எம் முஹம்மது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் நேற்று (23) கைது செய்யட்டு புத்தளம் மேல் நீதிமன்றத்தின் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதனை அடுத்து மே மாதம் 6 ஆம் திகதிவரை காதி நீதிபதியை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

புத்தளத்தின் காதியாராக செயற்பட்டவரது இஸ்லாமிய சட்டங்களுக்கு முரணான பல்வேறு செயல்பாடுகளை சுட்டிக்காட்டி, நீதிபதியின் நியமனம் முதல் புத்தளம் பெரிய பள்ளிவாசல் , புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம், நீதிச்சேவை ஆணைக்குழு மற்றும்கொழும்பு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு என்பவற்றிற்கும் பல்வேறு தரப்புக்களிடம் இருந்து முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் கொழும்பு விசேட இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் கடந்த மூன்று நாட்களாக கொழும்பிலிருந்து புத்தளத்திற்கு வருகை தந்திருந்து மேற்படி காதி நீதிபதியின் நடவடிக்கைகளை அவதானித்து வந்துள்ளனர்.

விவாகரத்து சான்றிதழ் பெறுவதற்காக சிலரை 22 ஆம் திகதி வருகை தருமாறு அறிவிக்கப்பட்டு, அந்த தினத்தை மாற்றி 23 ஆம் திகதி வருகை தரும்படி அழைப்பு விடுத்திருந்தார். இதன் போது சம்பந்தப்பட்ட நபரிடம் விவாகரத்து சான்றிதழ் வழங்குவதற்கு 5000 ரூபா பணம் இலஞ்சமாக பெற்றுக் கொண்டமைக்காக காதி நீதிபதி கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காதியாருடைய காலம் நீடிக்கப்படாத நிலையில் இன்னும்ஒருவர் வரும்வரைக்கும் அதற்கான கோவைகளை சரி செய்யும் வேலையை செய்து கொண்டிருக்கின்ற பொழுதிலே பல்வேறு விவாக, விவாகரத்து தொடர்பான விடயங்களை இவர் கையாண்டிருந்தார் என குறிப்பிடப்படுகிறது.

# நடிகை தமிதாவுக்கும் கணவருக்கும் பிணை

நடிகை தமிதா அபேரத்னவும் அவரது கணவரும் தலா 5 மில்லியன் ஷரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பணமோசடி வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள், இன்று கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.04.2024இல் வெளியிடப்பெற்றது.